O.S. 102/2019

சார்பு நீதிமன்றம், விருதுநகர்

நாள்: 26.06.2024

DW1: செந்தில்குமார் த/பெ– நாராயணசுவாமி

**<u>சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி–</u>**

2001 ல் ஏற்பட்ட வாடகை ஒப்பந்ததிற்கு முற்பட்ட காலத்தில் திருமகள், நிர்மலா, ராஜி ஆகியோர்கள் தாவா சொத்தில் எந்த அடிப்படையில் தொழில் செய்து கொண்டிருந்தார்கள் என்றால் மூவரும் எங்கள் நிறுவனத்தின் டீலராக இருந்தார்கள். டீலர்ஷிப் ஒப்பந்தத்தில் சரத்துக்கள் குறிப்பிடப்பட்டு இருக்கும் என்றால் சரிதான். அந்த ஒப்பந்தத்தில் வழக்கிடை சொத்து, அதில் உள்ள கட்டுமானங்கள் பற்றி குறிப்பிடப்பட்டிருக்கும் என்றால் சரிதான். டீலர்ஷிப் ஒப்பந்தத்தின் அடிப்படையில் இந்தியன் ஆயில் கார்பரேஷன் சார்பாக ஏற்படுத்தப்பட்டிருக்கும் கட்டுமானங்கள் மற்றும் இதர உபகரணங்கள் பற்றி குறிப்பிடப்பட்டிருக்கும் என்றால் சரிதான். இந்தியன் ஆயில் கார்பரேஷனால் ஏற்படுத்தப்படும் டீசல், பெட்ரோல் டேங்க், கூரை, டீசல் விநியோக்கும் இயந்திரம் ஆகியவற்றின் Outfit என்று சொல்வார்கள் என்றால் இல்லை, ஒவ்வொன்றுக்கும் தனித்தனி பெயர் உண்டு. என்னிடம் காட்டப்படும் ஆவணம் கடந்த 15.04.2008 ம் தேதியிட்ட நிர்மலா, ராஜி மற்றும் திருமகள் ஆகியோர் இந்தியன் ஆயில் கார்பரேஷனுடன் ஏற்படுத்திக்கொண்ட டீலர்ஷிப் ஒப்பந்தம் என்றால் சரிதான். அந்த ஒப்பந்ததில் இரண்டாம் அட்டவணையில் இந்தியன் ஆயில்

கார்பரேஷனால் ஏற்படுத்தப்பட்ட உபகரணங்கள் பற்றி விரிவாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதில் 22/15 டேங்க், HSD MS, Dispensing Unit, டிப்-ராடு(DIP ROD), Filter, Electronic And Pipe line Connection, Pump Make and Model, Hand Operated Belt, Motor Belt, Handle, Pump keys, Padlock with Keys, Opening Meter Reading, Air Compressor with Starter, Air Gauge, Auto Hoist/Hoist, Hard Washer Equipments, Lubrication Equipments Such as Over Head reels, Power and Hand Operator, Guns for Oil/Greece, Chasis Lubricates(Mobile Units), Old Drain containers (Mobile Units), Lubsters Hi-Boys, Shield Sign equipments, Any other item given by corporation from Time to Time. ஆகியவை சொல்லப்பட்டுள்ளது. மேற்சொன்ன உபகரணங்களை இந்தியன் ஆயில் கார்பரேஷனிடமிருந்து SPK நடத்திவரும் நிர்மலா, ராஜி, திருமகள் ஆகியோர்கள் பெற்றுக்கொண்டதாக அட்டவணை -2 ல் குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் அவை 18.06.2001 ல் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. என்னிடம் காட்டப்படும் ஒப்பந்தத்தில் 15.04.2008 என்று சொல்லப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். அந்த ஒப்பந்தத்தில் 2001 ல் நிர்மலா, ராஜி, திருமகள் ஆகியோர்களிடம் ஒப்படைத்ததாக சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் ஒப்பந்தத்தில் 18.06.2001 ல் ஒப்படைக்கப்பட்டதாக 15.04.2008 ஒப்பந்ததில் சொல்லப்பட்டுள்ளது. அந்த ஒப்பந்ததில் 15.04.2008 என்று தான் குறிப்பிடப்பட்டு கையெழுத்து போடப்பட்டுள்ளது என்று சொன்னால் 15.04.2008 ம் தேதி ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டு 18.06.2001 முதல் அமலில் உள்ளது. 15.04.2008 ம் தேதி தான் அதில் கையொப்பம் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். அந்த ஒப்பந்ததில் 2-ம் அட்டவணையில் Description of Outfit வாசகம் உள்ளது என்று சொன்னால் சரிதான். அந்த அட்டவணையில் சொல்லப்பட்ட பொருட்களை தான் Description of Outfit

என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் Description of Outlet என்பது Description of Outfit என்று சொல்லப்பட்டுள்ளது. அதே அட்டவணையில் Retail Outlet என்ற வாசகம் உள்ளது என்று சொன்னால் சரிதான். நிர்மலா, ராஜி, திருமகள் ஆகியோர்கள் வழக்கிடை சொத்தில் நடத்தி வந்த டீலர்ஷிப் பெட்ரோல்பங்கை Retail Outlet என்று சொல்லப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். டீலர்ஷிப் ஒப்பந்தம் ரத்து செய்யப்பட்டால் அந்த உபகரணங்களை இந்தியன் ஆயில் கார்பரேஷன் எடுத்துக்கொள்ளும் என்று சொன்னால் சரிதான், பின்னர் சாட்சி தன்னிச்சையாக தகுந்த வாடகை ஒப்பந்தம் இருக்கும்பட்சத்தில் அந்த இடத்துடன் சேர்த்து எடுத்துக்கொள்ளும். என்னிடம் காட்டப்படும் டீலர்ஷிப் ஒப்பந்தத்தில் இடத்தையும் சேர்த்து எடுத்துக்கொள்ளலாம் என எந்த வாசகமும் இல்லை என்று சொன்னால் சரிதான், (பின் சாட்சி தன்னிச்சையான முன்வந்து இந்தியன் ஆயில் நிறுவனத்தில் இரண்டு வகையான பெட்ரோல் பங்க்கள் (A, B Sites)உள்ளது. A site என்பது இந்தியன் ஆயில் நிறுவனம் பெட்ரோல் உள்ள இடத்தினை சொந்தமாகவோ இடத்தினை வாங்கியோ, அல்லது வாடகை அடிப்படையிலோ இடத்தை தேர்வு செய்து பெட்ரோல்பங்க் அமைக்கும். B Site என்பது டீலருக்கு சொந்தமான இடத்தில் உபகரணங்களை அமைத்துக்கொடுக்கும். A site ல் இடத்தின் வாடகை ஒப்பந்ததிற்கும், டீலர் ஷிப் ஒப்பந்ததிற்கும் எந்த வித சம்மந்தம் இல்லை. இந்தியன் ஆயில் நிறுவனம் அவரவருடன் செய்துக்கொண்ட ஒப்பந்ததின் அடிப்படையில் செயல்படும் என்று கூறுகிறார்). என்னிடம் காட்டப்படும் ஒப்பந்தம் 15.04.2008 ல் நிர்மலா, ராஜி, திருமகள் ஆகியோர்களுடன் இந்தியன் ஆயில் நிறுவனம் ஏற்படுத்திக்கொண்ட டீலர்ஷிப் ஒப்பந்தம் ஜெராக்ஸ் என்றால்

சரிதான். அந்த ஒப்பந்தம் **வா.சா.ஆ.17** ஆகும். வா.சா.ஆ.17ல் 3வது பக்கத்தில் நிபந்தனை 8a-ல் Outfits என்ற வாசகம் 3 இடங்களில் சொல்லப்பட்டுள்ளது. அட்டவணை-2ல் சொல்லப்பட்டுள்ள 21 உபகரணங்களை தான் Outfits என்ற வாசகம் குறிப்பிடுகிறது என்று சொன்னால் சரிதான். மேற்படி நிபந்தனை 8aல் அந்த உபகரணங்களை எப்போது வேண்டுமானாலும் எந்த காரணமின்றி இந்தியன் ஆயில் நிறுவனம் எடுத்துச்செல்லாம் என்று உள்ளது என்று சொன்னால் சரிதான். அட்டவணை -2ல் குறிப்பிடப்பட்டுள்ள Outfits என்ற வாசகம் வா.சா.ஆ.17ல் பல இடங்களில் உள்ளது என்று சொன்னால் சரிதான். Outfits என்ற வாசகம் Dealer-களுக்கு இந்தியன் ஆயில் நிறுவனத்தினால் கொடுக்கப்படும் உபகரணங்கள் என்றால் சரிதான். வா.சா.ஆ.17ல் அட்டவணை -2ல் Roofing பற்றி வாசகம் சொல்லப்படவில்லை என்று சொன்னால் 21 வது அயிட்டமாக உள்ளது. 21 வது அயிட்டத்தில் Roofing என்ற வாசகம் குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரிதான், பொதுவாக வேறு சில பொருட்கள் என்பது Roofing சேர்த்து சொல்லப்பட்டுள்ளது. வா.சா.ஆ.17ல் பக்கம் 19ல் அட்டவணை-2ல் கண்ட 21வது காலத்தில் Roofing என்பது குறிப்பிட்டு சொல்லவில்லை என்று சொன்னால் இதற்கான பதிலை ஏற்கனவே சொல்லிவிட்டேன். இந்தியன் ஆயில் நிறுவனம் தாவா சொத்தில் நிரந்தர கட்டுமானங்கள் எதுவும் ஏற்படுத்தினால், விருதுநகர் நகராட்சியிடம் அனுமதியை பெறவேண்டும் என்று சொன்னால் கட்டிடத்திற்கு மட்டும் தான் அனுமதி பெறவேண்டும். தாவா சொத்தில் நிரந்தர கட்டுமானங்கள் இந்தியன் ஆயில் நிறுவனத்தினால் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது என்பதற்கும் உள்ளாட்சி அமைப்பில் அனுமதி பெற்று வரைபடம் சமர்பித்து அதற்கு அங்கீகாரமும்

பெற்றதற்கான ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான், அவை இவ்வழக்கிற்கு சம்மந்தம் இல்லை. அவை சம்மந்தம் இல்லை என்று நானாக முடிவு செய்ய முடியாது என்று சொன்னால் அது என்னுடைய கருத்து.

(வேண்டுக்கோளுக்கிணங்க குறுக்கு விசாரணை மற்றொரு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.)